திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்

ந.க. எண்: 46 / 2022

நாள்: 05.05.2022

**1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும்**

# ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

திருப்போரூர் பேரூராட்சிக்காகவும், அதன் சார்பாகவும் 2021-2022-ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 20ம் தேதி (20.05.2022) வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை செயல் அலுவலர் அவர்களாலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் அன்று மாலை 3.30 மணி அளவில் அப்போது வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிக்கான நமுனா படிவம் 19.05.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை திருப்போரூர் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

| வ. எண் | இனங்கள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) | வைப்புத் தொகை (ரூ) | ஒப்பந்தப் புள்ளி படிவத்தின் விலை (ரூ) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள பழமையான காலவாக்கம் பள்ளி பேருந்து நிலையத்தில் நிழற்குடை அமைக்கும் பணி | 5,50,000/– | 5,500/– | 1689/– | 60 நாட்கள் |

**நிபந்தனைகள்**

1. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் முகவரி தெளிவாக எழுதி சமர்ப்பித்தல் வேண்டும்..
2. ஒப்பந்த புள்ளிகள் அடித்தல், திருத்தல் இருந்தால் அதனை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் கையொப்பமிட்டு உறுதி செய்தல் வேண்டும்.
3. ஏற்கனவே பேரூராட்சியின் பணிகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
4. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் காரணம் ஏதும் இன்றி நிராகரிக்க செயல் அலுவலர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட வேலைகளுக்கான விவரங்களை அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
5. பணி துவங்குவதற்கு முன்னர் 20/– மதிப்புள்ள முத்திரை தாளில் பேரூராட்சி செயல் அலுவலருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.
6. பணி செய்து முடித்தவுடன் அளவுகள் மற்றும் மேலளவுகள் செய்து அளவு புத்தகத்துடன் பட்டியல் தயாரித்த பின்னர் பேரூராட்சியில் தொகை பட்டுவாடா செய்யப்படும்.
7. ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ செயல் அலுவலர், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்கு செல்லத்தக்கது.
8. ஒப்பந்தப்புள்ளி ஏற்பளிக்கப்பட்ட படிவத்தில் பிணை வைப்புத் தொகையின்றி அனுப்பப்பட்டதை நடவடிக்கையின்றி தள்ளுபடி செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
9. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகே பணிக்கான பணி ஆணை வழங்கப்படும்

10. வேலைகள் குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்கத் தவறினால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை (Deposit) பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

11. பணியினை மேற்கொள்ள உத்தரவு வழங்கும் போது அப்பணிக்கான மதிப்பீடு தொகையில் 1% தொகைக்கான கட்டிடத் தொழிலாளர் நல வாரியத்திற்கான வங்கி வரைவோலையை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்காக செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும். தணிக்கை தடை ஏற்படுமாயின் குறிப்பிட்டுள்ள தொகையை தாங்கள் பிற பணிகளுக்காக செலுத்திய வைப்புத் தொகையிலிருந்தும் பிடித்தம் செய்யப்படும்.

13. பணிகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் காஞ்சிபுரம் மண்டலம் அவர்களிடம் பெற்று தரமான முறையில் செய்து முடிக்க வேண்டும்.

14. பணிகள் முடித்து ஓராண்டு காலத்திற்குள் சேதமடைந்தால் ஒப்பந்ததாரரே சொந்த செலவில் சரி செய்து தர வேண்டும்.

15. பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணியின் ஒவ்வொரு கட்டத்திலும், பணி முடிவுற்ற பின்னரும் புகைப்படம் ஒப்பந்ததாரர் செலவிலேயே எடுத்து, பேரூராட்சி அலுவலகத்தில் சமர்பிக்கப்பட வேண்டும்.

16. பணிகளுக்கு தேவைப்படும் பி.வி.சி. பைப்புகள் ISI தரம் வாய்ந்த மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் ஒப்பந்ததாரரே சொந்த செலவில் வாங்கி பயன்படுத்தி அதற்குண்டான அசல் இரசீதினை பணப்பட்டுவாடாவின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

17. **ஏற்கனவே பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களில் 2022–2023 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்த பதிவினை புதுப்பித்துக் கொண்டவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படும்.**

செயல் அலுவலர்
திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்

பெறுநர் : பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்கள்.

நகல் :
1. பேரூராட்சிகளின் ஆணையர், குறளகம், சென்னை–108 அவர்களின் மேலான தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
2. மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
4. திருமிகு, க.செல்வம், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் மேலான தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
5. மதிப்புமிகு எஸ்.எஸ் பாலாஜி, திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் மேலான தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
6. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலம் காஞ்சிபுரம் மண்டலம்.
7. இளநிலை பொறியாளர் திருப்போரூர் பேரூராட்சி தொடர் நடவடிக்கைக்காக
8. தலைவர், துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர், திருப்போரூர் பேரூராட்சி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
9. திருப்போரூர் பேரூராட்சி விளம்பர பலகையில் விளம்பரம் செய்ய.
10. செயல் அலுவலர் : திருக்கழுக்குன்றம் மற்றும் மாமல்லபுரம் பேரூராட்சிகளின் விளம்பர பலகையில் விளம்பரம் செய்ய.